going to start Accident Department. ஆக்சிடென்ட் டிபார்ட்மென்ட் என்று ஒரு பெரிய ஸ்கீம் போட்டு அதுபற்றி விரிவாக பட்ஜெட்டில் அறிவிக்க இருக்கிறோம்; ஆகையால் இங்கே இப்போது அறிவிப்பது சரியல்ல. படிப்படியாக விஸ்தரிக்க இருக்கிறோம். ஆக்சிடென்டாகி அதிகமாக கேஸ் வரும் இடங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்ற முறையில் கேட்டார்கள். நேஷனல் ஹைவேய்ஸ், ஸ்டேட் ஹைவேய்ஸ் இருக்கின்ற இடங்களிலுள்ள தாலுகா தலைமையிட மருத்துவ மனைகளுக்கு முதலிடம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் மினி பஸ் வசதி

*வினா எண்—197. திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் மினி பஸ் (சிறிய) வசதி கோரி அரசுக்கு ஏதேனும் மனுக்கள் வந்ததா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

அரசுக்கு வந்துள்ள மனுக்கள் மண்டலப் போக்குவரத்து அலுவலரின் மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

திரு. எம். செல்லமுத்து: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சிறிய பஸ்களை விடுவதற்கு சேசிஸ் கிடைக்கவில்லை என்று மண்டலப் போக்குவரத்து இயக்குநர் சொல்கிறார். அதை உடனடியாக அரசு ஆராய்ந்து, அதற்காக ஒரு தொழிற்சாலையை அரசு அமைத்து, தஞ்சை மாவட்டத்தில் இருக்கக் கூடிய குறையை நிவர்த்தி செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்ததைவிட இப்போது கொஞ்சம் சுலபமாக சேசிஸ் கிடைக்கிறது. அரசாங்கம் அதை தயாரிக்க வேண்டுமென்று போனால் இந்த வேலைகளை சரியாக கவனிக்க முடியாமல் போகலாம். ஆகவே, அதற்காக தொழிற்சாலை அமைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை. அங்கே தேவையான பேருந்துகள் விட வாய்ப்பு இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1982 பிப்ரவரி 16]

திரு. எம். கே. ராஜமாணிக்கம்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மட்டும் மினி பஸ்கள் விட மனுக்கள் வந்திருக்கின்றனவா என்று கேட்டதற்குப் பதில் சொன்னார்கள். இந்தத் திட்டம் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும்தான் செயல்படுத்தப்படுமா, அல்லது மற்ற மாவட்டங்களுக்கும் செயல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, கேள்வி தஞ்சை மாவட்டத்தைப் பற்றி மட்டும் கேட்டிருந்தார்கள்; அதனால் அந்த பதிலைச் சொன்னேன். எல்லா இடங்களுக்கும் சிறிய பேருந்துகள் விடும் திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதனால் இந்தக் கேள்வியைக் கேட்டார்கள், இதற்கு ஒரு கேள்வி தேவையா என்பது என்னுடைய கேள்வியாக இருக்கிறது.

திரு. எம். செல்லமுத்து: தலைவரவர்களே, மண்டலப் போக்குவரத்து அலுவலரின் ஆய்வில் இருப்பதாக சொன்னார்கள். உடனடியாக ஆய்வை முடித்து சிறிய பஸ்களை விட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, விரைவான நடவடிக்கையின் காரணமாகத்தான் இத்தனை பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. நீங்கள் அனுப்பியிருக்கிற மனுக்களை இப்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். இதற்கு முன்னாலே கூட ஏழு வழித்தடங்களில் விட வேண்டுமென்று பரிசீலனை செய்து வைத்திருக்கிறோம். ஆகவே, படிப்படியாக மினி பஸ்கள் விடப்படும்.

திரு. த. வீராசாமி: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் நஞ்சை நிறைந்த மாவட்டம். அங்கே சாலைகள் மிகக் குறுகலாகவும், வளைந்தும் செல்வதால் பெரிய பேருந்துகள் செல்ல முடியவில்லை. எனவே அங்கே சிறிய மினி பஸ் விடுகின்ற திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவுபடுத்தி அங்குள்ள மக்களுடைய குறையினைப் போக்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஏற்கெனவே அந்தப் பகுதியிலே ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்துகள் அவ்வளவு பெரிய இடையூறாகத் தெரியவில்லை. அவை ஓரளவுக்கு ஓடிக் கொண்டுதான் இருக்கின்றன. பெரிய பேருந்துகளை விட முடியாமல் சிறிய பேருந்துகளை விட்டால்தான் முடியும் என்று இருக்கின்ற அந்த இடங்களுக்காகத்தான் அரசாங்கம் இந்த திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றது.

திரு. கே. சொக்கலிங்கம் : தலைவரவர்களே, மினி பஸ் விடுகின்ற திட்டத்தை தஞ்சை மாவட்டத்திற்கு மட்டுமல்லாமல் சென்னையை அடுத்து இருக்கின்ற செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் விரிவு படுத்தும் உத்தேசம் உண்டா? எல்லா மாவட்டத்திற்கும் இவ்வாறு மினி பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோன்ற கேள்விதான் ஏற்கெனவே கேட்கப்பட்டு அமைச்சரவர்களும் அதற்குப் பதில் சொல்லிவிட்டார்களே; ஆகவே மீண்டும் கேட்க வேண்டாம்.

விரைவுப் பேருந்துகளில் திரைப்படம் காண்பிக்கும் திட்டம்.

* வினா எண் 198— திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு விரைவுப் பேருந்துகளில் திரைப்படம் காண் பிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) வேறு புதிய பேருந்து தடங்களுக்கும் இத் திட்டம் விரிவாக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, (அ) சென்னை—திருவனந்தபுரம், சென்னை—பெங்களூர் ஆகிய தடங்களில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால இயக்கப் படும் சொகுசு குளுமை விரைவுப் பேருந்துகளில (ஏர் கண்டிஷன்ட் டீலக்ஸ் கோச்சஸ்) திரைப்படம் காண்பிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) இத் திட்டத்தை வேறு புதிய பேருந்துத் தடங்களுக்கு விரிவாக்கும் திட்டம் ஏதும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் தற்போது இல்லை. ஆனால் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே, நீண்டதூரம் பயணம் செய்கின்ற பயணிகளுக்குப் பொழுது போவதற்கு இது போன்று வேறு ஏதேனும் சாதனங்களைப் பொருத்துகின்ற யோசனை எதுவும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, திரைப் படம் காட்டுவதைத்தான் பொழுது போக்க ச் காட்டிக்கொண் டிருக்கிறோம். வேறு எப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்பது தெரியவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கொஞ்சம் யோசனையும் சேர்த்து சொல்ல வேண்டும். பயணிகள் தொடர்ச்சியாக அமர்ந்து கொண்டு செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால் இப்போது தூங்குவதற்குக் கூட ஏற்பாடு செய்யவேண்டும் என்று அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக் கின்றது. இன்னும் படிப்பதற்குரிய ஏற்பாடுகள் போன்றவற்றைச் செய்யவேண்டும் என்று கேட்கின்ற சூழ்நிலைகள் இருந்தால் அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றது.